# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

# O.S. No.162/2019

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் நாள் வாதி தரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின்ஏற்பாட்டின்படி திரு.A.S.அமீர்தீன், B.A.,B.L.,LLM,D.JJJ.Psy, மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**<u>தேதி 10.11.2022</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமேகலை | ஜாதி | : | |
| க /பெயர் | : | சிவசுப்ரமணியன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

மேற்படி வாதிதரப்பில் 1 வது சாட்சியான மணிமேகலை கடந்த 07.12.2021 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு வந்த சூழ்நிலையில் மேற்படி வாதி தரப்பில் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களை தாக்கல்செய்ய வேண்டியிருப்பதால் மேற்படி முதல் விசாரணை முற்றிலும் முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்துவந்த சூழ்நிலையில் இன்று மேற்படி வாதி தரப்பில் 1 வது சாட்சி ஆஜர்.

**<u>வா.சா.1 மணிமேகலை முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

| வ. எண். | தேதி | ஆவண விவரம் | குறியீடு செய்யப்பட்ட விவரம் | ஆட்சேபனை |
|---|---|---|---|---|
| 1 | 07.03.1990 | வழக்குரை B அட்டவணை சொத்துக்கான கிரய ஆவணம் - அசல் | வா.சா.ஆ.1 | இல்லை |
| 2 | 22.11.1995<br>08.04.1999 | வழக்குரை B அட்டவணை சொத்துக்கான வரி ரசீது கோர்வை - 2 - அசல் | வா.சா.ஆ.2 | உள்ளது<br>சொத்தானது இளவர் பெயரில் பெறப்பட்டு மேற்படி இளவரும் இறந்துவிட்ட சூழ்நிலையில் மேற்படி ரசீது அவர் பெயரில் உள்ளதால் கடுமையாக ஆட்சேபனை செய்கிறார் எனவே ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 17.02.2019 | புலஎண்.327/3B-க்கான சிட்டா - கணினி பதிவிறக்கம் - | வா.சா.ஆ.3 | இல்லை |
| 4 | 03.12.2019 | புலஎண்.327/B1- க்கான சிட்டா - கணினி பதிவிறக்கம் - | வா.சா.ஆ.4 | இல்லை |
| 5 | 03.12.2019 | புலஎண்.327/B2- க்கான சிட்டா - கணினி பதிவிறக்கம் - | வா.சா.ஆ.5 | இல்லை |
| 6 | 03.12.2019 | புலஎண்.325/5A, 5B- க்கான சிட்டா - கணினி பதிவிறக்கம் - | வா.சா.ஆ.6 | இல்லை |
| 7 | 03.12.2019 | வழக்குரை A அட்டவணை, B அட்டவணைசொத்திற்கான புலப்படம் - கணிணி பதிவிறக்கம் | வா.சா.ஆ.7 | உள்ள து |
| 8 | 25.03.2017 | சுரேஷ் இறப்பு சான்று - அசல் | வா.சா.ஆ.8 | இல்லை |
| 9 | 29.06.2019 | பெருகவாழ்ந்தான் காவல்நிலையத்தில் வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனுவுக்கான ரசீது - அசல் | வா.சா.ஆ-9 | இல்லை |
| 10 | 10.02.2020 | மன்னார்குடி வட்டாட்சியரால் வாதி மணிமேகலைக்கு கொடுக்கப்பட்டுள்ள வாரிசு சான்று | வா.சா.ஆ.10 | இல்லை |

எனவே, கோர்ட்டார் அவர்கள் மேற்படி ஆவணங்களை எனது தரப்பு சங்கதிகளை பரிசீலித்து ஒரு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்கு சம்மந்தமாக ஆவணங்களை பரிசீலித்து தனது தரப்பு சாட்சிகளிடம் ஆலோசனை பெற்று சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேறொரு தேதிக்கு குறுக்கு விசாரணை செய்ய கேட்கிறார். நீதிநலன்கருதி மேற்படி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

(Sd/-A.S.Ameerdheen)
District Munsif
Mannargudi.